விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 வைகாசி 2 ஷஃபா 24 இதழ் 94
யாழ்ப்பாணம் புதன்கிழமை 15-5-1985

# இலங்கை இனப்பிரச்னையை

## உலக மேடைகளில் எழுப்புமாறு

# இந்திய அரசுக்கு கோரிக்கை

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னையை சர்வதேச மேடைகளில் எழுப்புமாறும் அதன் மூலம் அங்கு நடைபெறும் இனக்கொலை தொடர்பாக உலகின் கவனத்தைதிருப்புமாறும்சட்டசபை உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்திய அரசை வற்புறுத்தியுள்ளனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திரா காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட தூதுக்கோஷ்டியொன்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. பழனியாண்டி தலைமையில் புதுடில்லியில் பிரதமர் திரு ரஜீவ் காந்

(5-ம் பக்கம் பார்க்க)

## ராஜாங்க அமைச்சு நேற்று விடுத்த அறிக்கை

அனுராதபுரம், நொச்சியாகம, மருதங்கடுவையில்

# தீவிரவாதிகளின் தாக்குதலால்

# 70 பேர் பலி, 100 பேர் காயம்!

## பிணமாக அல்லது உயிருடன் தாக்கியோரை பிடிக்க முயற்சி

(கொழும்பு)

அனுராதபுரம், நொச்சியாகம, மருதங்கடுவ ஆகிய இடங்களில் நேற்று தமிழ் தீவிரவாதிகள் கோஷ்டியொன்று நடத்திய தாக்குதல்களின் காரணமாக 70 பேர் வரை மரணமாகியுள்ளனர் என்றும் 100 பேர் வரை காயமுற்றுள்ளனர் என்றும் நேற்று ராஜாங்க அமைச்சு விடுத்த அறிக்கை கூறியது.

இச்சம்பவங்களையடுத்து அனுராதபுரத்தில் நேற்றுபிற்பகல் 2மணி தொடக்கம் இன்று அதிகாலை 6 மணி வரை ஊரடங்குச்சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளை பிணமாக அல்லது உயிருடன் பிடிப்பதற்கு ஆயுதப்படையினர் தீவிர நடவடிக்கையில் இறங்கியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

பஸ் வண்டியொன்றில் இராணுவ சீருடையில் வந்த தீவிரவாதிகள் குழு அனுராதபுரம் பஸ்நிலையத்தில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர் மரணமானதாகவும், இன்னும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பஸ்நிலைய துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து அனுராதபுரம் பழையநகருக்குச் சென்று ஸ்ரீ மகாபோதிக்கருகே நின்ற பொதுமக்களைச் சுட்டார்

(6-ம் பக்கம் பார்க்க)

எங்கள் அப்பாவை

(எஸ். வி. முருகேசு)

கடத்திச் சென்றவர்களுக்கு

ஓர் தயவான

வேண்டுகோள்

எங்கள் அப்பாவைக் கடத்திய நாள் தொடக்கம் எங்கள் தாயார் தொடர்ந்தும் படுக்கை நிலையிலேயே இருக்கிறார் என்பதை அறியத்தருகின்றோம்.

எங்கள் அப்பாவைக் கடத்தியவர்கள் இன்று 14-ந் திகதி விடுவிக்கத் தவறினால், நாம் புதன்கிழமையிலிருந்து அதாவது 15-ம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளோம் என்பதை மிகவும் மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

இங்ஙனம்
பிள்ளைகள்.

குறிப்பு:

நேற்று [14-5-85] 'ஈழநாடு' முன்பக்கத்தில் வெளியான இதே விளம்பரத்தில் தவறுதலாக ஒருவரது படம் வெளியாகியிருந்தமைக்காக வருந்துகின்றோம்.

— நிர்வாகி

(3248)

## படுகொலைகளைத் தடுக்குமாறு ஜனாதிபதிக்கு தந்தி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு 8 பேர் பலியாகியுள்ளதாகவும், அப்பாவிமக்கள் படுகொலைசெய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறும் பருத்தித்துறைப் பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரி

(5-ம் பக்கம் பார்க்க)

17ம் திகதியுடன்

## பொது நூலகத்தை மூடிவிட உத்தரவு?

(யாழ்ப்பாணம்)

யாழ் பொதுசன நூல் நிலையத்தை இம்மாதம் 17ம் திகதியுடன் மூடிவிடும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நூல் நிலையத்துக்குள்ளிருக்கும் புத்தகங்களையும், தளபாடங்களையும் உடனடியாக அகற்றும்படியும் கேட்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. [மா]

நேற்றும் பல கிராமங்கள்

## சுற்றி வளைத்து பலத்த சோதனை

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய், சங்கானை, ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய கிராமங்கள் நேற்று அதிகாலை தொடக்கம் சுற்றி வளைக்கப்பட்டு, பலத்த சோதனையிடப்பட்டது.

(5-ம் பக்கம் பார்க்க)

## பஸ்கள் திரும்பின

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக்காலை கொழும்பு நோக்கிப் புறப்பட்ட பஸ்கள், ஓமந்தையில் நெடுநேரம் தரித்து நின்றுவிட்டு பிற்பகல் 6மணியளவில் மீண்டும் யாழ்ப்பாணம வந்துசேர்ந்தன.

(6-ம் பக்கம் பார்க்க)

## பலாத்காரம் பற்றி இளம்பெண் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

தனது நான்கு வயதுப்பிள்ளைக்கு முன்னால் சோதனையிட வந்தவர்களில் ஒருவர் தன்னை பலாத்காரம்செய்ததாக யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நல்லூரைச் சேர்ந்த 23 வயதான இளம்பெண் பொலிசாருக்கு நேற்று அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

(3ம் பக்கம் பார்க்க)

## இன்று கச்சேரியில் ஓய்வூதியம் செக்மூலம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் கச்சேரியில் ஓய்வூதியம் பெற்றுவந்து பின்னர் குருநகர் வங்கியில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுககு மீண்டும் இன்று தொடக்கம் ஓய்வூதியம் காசோலை மூலம் கச்சேரியில் வழங்கப்படும்.

குருநகர் வங்கி இயங்காமையின் காரணமாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று 15ம் திகதி 1ம் பக்கம் தொடக்கம் 122ம் பக்கம் வரையுமுள்ளவர்களுக்கு ஓய்

(6-ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

சுன்னுகம் பஸ் நிலையத்துக்கு அருகாமையில் டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் மின்சாரம், கிணறு, மலசல கூடத்துடன் புதிய வீடும் காணியும் விற்பனைக்குண்டு. P விக்டர், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னுகம். 3259

டெலிக்கா வானுக்குரிய இரண்டு ஆசனங்கள் (Seats) விற்பனவுக்குண்டு 185, 3ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். 3261

## தேவை

நல்லொழுக்கமும் பண்பாடுமுள்ள 68 வயது இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தருக்கு யாழ் - டவுன், சண்டிக்குளி, நல்லூர் சுற்றுடலில் தங்குவதற்கு ஒரு அறை (with Attached Bath and Lavatory) உடன் தேவை. காலை மாலை சாப்பாடு விரும்பத்தக்கது. விளம்பர இல: 3240. மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 3240

மொத்த விலைக்கு முட்டை வாங்குவோம் உற்பத்தியாளர்கள் உடன்தொடர்பு கொள்க: யூனிபோ, பலாலி வீதி, உரும்பிராய். 3268

## வாடகைக்கு

மானிப்பாயில் சகலவசதியும் உள்ள சிறிய வீடு வாடகைக்குத் தேவைப்படுகின்றது. கௌரவமான சிறு குடும்பம். தொடர்பு; விளம்பர இல: 3260 மே/பா,ஈழநாடு, யாழ்ப்பாணம். 3260

யாழ். இந்து, இந்து மகளிர் கல்லூரிகளுக்கிடையில் 70/10, அரசடி ஒழுங்கையில் (off சிவகுருநாதர் ஒழுங்கை தொலைபேசி உட்பட சகலவசதிகளுமுள்ள ஆறு அறைகள் அடங்கிய புதிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. 3221

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

## விற்பனைக்கு

அதிகமான வெப்பத்திலிருந்து தாங்க முடியவில்லையா? இன்றே அதிசிறந்த M G M. தயாரிப்பாளர் நெல்லிகிறஸ் அருந்தி உங்கள் கவலையை மறந்துவிடுங்கள். முழுபோத்தல் விலை ரூபா 27-50 M G M, and Stores, 777, காங்கேசன்துறை வீதி and 208, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611 2820

## மணப்பந்தல்

மத்திய கிழக்கு நாட்டில் தொழில் புரியும் செவ்வாய் தோஷமற்ற கத்தோலிக்க உயர் வேளாளகுலத்தவரும் மது, புகைத்தல் பழக்கமில்லாத, 30 வயதுடைய மணமகனுக்கு அழகும், கல்வியறிவுமுள்ள மணமகள் தேவை 10 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும். விபரங்களுக்கு விளம்பர இல. 3263 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3263

வலி கிழக்கு
தெ. ப. ப. நோ. கூ, சங்கம்

## வெற்றுச் சாக்கு கேள்வி அறிவித்தல்

வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் 8500க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/- உம் கேள்விப்பத்திரம் ஒன்று ரூபா 1/-ம் செலுத்தி சங்க வேலை நாட்களில் 15-05-85ம் திகதிதொடக்கம் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 20-5-85 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்
நீர்வேலி,
19.5-56. 3264

## St. John's College, Jaffna
## 2 – Year Diploma Course in Automobile Engineering

Applications are invited for the above Job - oriented course leading to examinations of the Institute of the Motor Industry and the City and Guilds of London Institute, London.

| | |
|---|---|
| Qualifications Required: | Passes in English and Mathematics in G. C. E. (O/L) or equivelent or higher exam. |
| Mode of selection: | Written test in English and Interview. |
| Fees: | Rs. 900/- per annum or Rs. 350/- per term |
| Deposit: | Rs. 350/- as security against use of Library books and Tools. This will be refunded on satisfactory completion of full course. |
| Medium of Instruction: | English/Tamil |
| Closing date: | 10th June, 1985. |

Apply to principal on prescribed form available at College office on payment of Rs. 10/- as exam. fee.

Main Street,
Chundikuli, Jaffna.
7-5-85. PRINCIPAL.

3251

## முதலிலேயே ஆக்கப்படும் மூற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

'பூவகம்', கைதடி, நாவற்குழி என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற டாக்டர் செல்லையா விவேகாநந்தராஜா என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்
— மரணமெய்தியவர்

டாக்டர் செல்லையா விவேகானந்தராஜா கைம்பெண் மகேஸ்வரி,
'பூவகம்',
நாவற்குழி, கைதடி.
தற்போது உரும்பிராய்
— மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. ரி/3415

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் முதலிலேயே ஆக்கப்படும் மூற்றுன கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்

என்னால் வரையப்பட்டது.
ஒப்பம்
க. கேசவன்,
மனுதாரின் சட்டத்தரணி.

1985ம் ஆண்டு 5-ம் மாதம் 3ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

3254

சி. கனகரத்தினம்,
ஜே பி யூ. எம்.
சட்டத்தரணியும்,
பிரசித்த நொத்தாரிசும்,
உதவியாளர்:
கனகரத்தினம் கேசவன்,
ஜே. பி யூ எம்.
சட்டத்தரணியும்,
பிரசித்த நொத்தாரிசும்.

## முதலிலேயே ஆக்கப்படும் மூற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு, தைக்கா ரோட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற முகைதீன் கண்டு முகம்மது அப்துல் காதர்பெண் சேம்பநாச்சியா என்பவரின் மரண சாதனத்தின் விடயத்தில்
- மரணமெய்தியவர்.

முகைதீன் கண்டு முகம்மது அப்துல் காதர்,
தைக்கா ரோட்டு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
— மனுதார்

மரண சாதன நியாயாதிக்கம் } இல: ரி/3649

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுஅதில் முதலிலேயே ஆக்கப்படும் மூற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
தா. குலஞானம்,
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது.
ஒப்பம்
க. கேசவன்,
மனுதாரின் சட்டத்தரணி,

1985-ம் ஆண்டு பங்குனி மாதம் 31ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 3255

## வெளிநாடு பயணிகளுக்கு

- பாஸ் போட்,
- விமானரிக்கட்
- பயணிகளின் காசோலை

முதலியன துரிதமாக செய்துகொடுக்கப்படும்.

Jaffna Property Trades Ltd.,
3, Model Market (Upstairs), Jaffna.
Phone: 23698

## சேவை

உங்கள் குளிர்சாதனப் பெட்டிகள் (Refrigerators, freezers, Air - Conditioners) பழுதடைந்துவிட்டனவா? கவலை வேண்டாம். உடனே எங்களுடன் தொடர்பு கொள்ளவும். இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற டெக்னீஷயன்களால் சகல திருத்தல் வேலைகளும் உத்தரவாதத்துடனும், காலதாமதமின்றியும் செய்து தரப்படும். குளிர் சாதனப் பெட்டிகளின் ஸ்பிரே பெயின்ரிங் வேலைகளும் ஏற்கப்படும்

REFRIGERATION ENGINEERING SERVICES
(STTAR ELECTRONICS)
37/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(3216)

இலங்கை இந்திய மக்களின் ஆவலைப் பூர்த்தி செய்யுமுகமாக, சென்னை மாநகரத்தில் மவுண்ட் ரோட், ஜெமினி சதுக்கம் (அண்ணா மேம்பாலம் அருகில்) அமைந்த

## "யாழ்ப்பாண இல்லம்"

அசைவ உணவகத்தைத் திறந்து முற்றிலும் இலங்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை பரிமாற இருப்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்,

உரிமையாளர்

யாழ்ப்பாண இல்லம்,
பார்சன்கொமோசல் கொம்பிளெக்ஸ்
ஜெமினி சதுக்கம்,
121,மவுண்ட் ரோட்,
சென்னை 6.

3239

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

சிவபதமடைந்த
செல்வி இன்பநிதி சண்முகலிங்கம்



தோற்றம்:
26-11-1973

மறைவு:
15-4-1985

ஒளி விளக்காய், அன்பின் திருவுருவாய, பண்பின் சிகரமாய், அறிவின் சுடராய், பாசத்தின் பிறப்பிடமாய், சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்று மின்னுமல் இடி இடித்தவாறு சிவபதமடைந்து எம்மையெல்லாம் அதிர்ச்சியடையச்செய்து ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் தெய்வமே உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அன்னார் சிவதமடைந்த செய்தி அறிந்து நேரில் அனுதாபம் தெரிவித்தோருக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியோருக்கும் கொழும்பிலும் இதற்கு உற்ற துணையாய் நின்று உதவிகள் புரிந்தோருக்கும் அந்திமக் கிரியைகளைச் சிறப்புடன் நடாத்த உதவிய அனைவர்க்கும் எங்கள் மனங்கனிந்த நன்றி உரித்தாகுக.

பிரிவால் துயருறும்
சண்முகலிங்கம் குடும்பத்தினர்.

மிசன் பாடசாலை ஒழுங்கை,
நெட்டிலைப்பாய், கோண்டாவில். (3257)

**மணிவாக்கு**

தற்பெருமை எங்கு முடிகிறதோ,
அங்கு ஆனந்தம் ஆரம்பிக்கிறது.

— ஓர் அறிஞர்.

## நமதுநோக்கு

## பிரதமர் பிரேமதாசாவின் சமரசப் போக்கு

அவன் என்னைத் திட்டினான், ஏமாற்றினான், வென்றான்— இத்தகைய எண்ணமுடையார் சினத்தை வெல்ல முடியாது, பகைமையையே வளர்ப்பார்கள்.

இவ்வுலகில் சினத்தைக் கொண்டு, சினம் ஏவும் வன்செயல்களைக் கொண்டு, சினத்தை ஆற்றிவிட முடியாது. சமாதானத்தை ஏற்படுத்த முடியாது: இதனை உணரும் நாள் வந்து விட்டது.

தமிழ் மக்களின் பிரச்னை நாளுக்கு நாள் அரசியல் எதிர்ப்பை அதிகரித்து வந்த காலத்தில் யாழ்ப்பாணம் பல அரசியல் கொலைகளைக் கண்டது, குறிப்பாக சுமார் நான்கு வருடங்களுக்கு முன நடந்த முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி. டாக்டர் தியாகராசாவின் கொலை பெரும் கவலையையும் கண்டனத்தையும் ஏற்படுத்தியது.

அன்னாரின் இறுதிச் சடங்கில் பிரதமர் பிரேமதாசா நிகழ்த்திய இரங்கல் உரை கவலையில் தோய்ந்திருந்த மக்களை உருக்கியது மறக்க முடியாத சம்பவம்.

''அரசியல் பேதங்கள் எவ்வளவு பாரதூரமானவையாயினும் இத்தகைய மனிதன் இவ்வாறு கொல்லப்படுவது நாட்டுக்கு மட்டுமல்ல அவருடைய எதிரிகளுக்குமே நட்டம்'' என்ற கருத்தை விளக்கிய பிரதமர் ''இளைஞர்களே! உங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டு உங்கள் குறைகளை எங்களிடம் பேச வாருங்கள். இவ்வித பகைமையும் கொலையும் தொடராதிருக்க நாட்டில் அமைதி நிலவ நான் இந்தப் பகிரங்க வேண்டுகோள் விடுகின்றேன்'' என்றார்.

இன்று நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன; அன்று அவ்வாறு பேசியதை எதிர்ப்பில்லாமல் பொறுமையாகக் கேட்ட தமிழ் மக்கள் இன்று அரசாங்கம் சார்பில் இவ்வாறு பேசும் எவரையும் அனுமதிப்பாரா?

அரசியல் கொலை அவ்வாறு தொடர தமிழ்மக்களின் சுயமரியாதையை. உயிர்ப்பாதுகாப்பைப் பேணும் ஒரு வீரர் கூட்டமே, இன்றைய தமிழ்ப் போராளிகள் என்ற கருத்து மாற்றம் தமிழர் மத்தியில் எங்கும் காணப்படுகிறது. அரச கொடுமைகள் அவ்வளவு தூரம் பெருகிவிட்டன.

மிகப் பாதுகாப்பாக அரசினால் பேணப்படும் வெளியூர் தமிழ் பிரஜைகளும் தங்கள் பாதுகாப்பில் உறுதி கொண்டவர்கள் அல்ல; தங்கள் சகோதரர்களை அவர்களின் சொந்த வீடு தேடிக் கொல்ல ராணுவம் உறுதி கொண்டதாக நினைக்கும் தமிழ் மக்கள் தங்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இளைஞரே என நினைப்பது பகிரங்க ரகசியம்.

இந்தத் தலைகீழான மாற்றம் ஏற்பட்டு வந்த காலத்திலும், பிரதமர் பிரேமதாசா சமாதானத்தையே பேசி வந்தார். இன்றைய குழப்ப நிலைக்கு இந்தியா ஆதரவு அளித்து வருவதை சில காலம் தீவிரமாகக் கண்டித்துவந்தார். இன்று அதுவும் மறைந்துவிட்டது.

படிப்பு குலப் பெருமை அரசியல் அனுபவம், சாணக்கியம் என்ற பலவகைப்பட்ட புருடார்களில் நம்பிக்கையற்றவர் பிரேமதாசா; உழைப்பால், கடும் உழைப்பால் செயல்வாதத்தால் இந்த நிலைக்கு உயர்ந்தவர் நாடு கெடுவதை, 'போரில்' இரு பகுதிகளும் அழிவதை பொறுக்க முடியாதவர்.

ஒரு மாத உலக விஜயத்தில் தம்முடைய 'பத்து லட்சம் வீடுகள்' திட்டம் பல நாடுகளிலும் ஆதரவு பெற்றதைக் கண்டும் தம் சொந்த நாட்டில் ஆயிரம் வீடுகள் கட்டியெழுப்ப, இரண்டாயிரம் வீடுகள் தீக்கிரையாவதை எவ்வாறு சகிப்பார்.

எனவே பிரதமரின் இன்றைய பேச்சில் ஒரு புதுமை தோன்றுகிறது. போராளிகள் ஆயுதம் கைவிட்ட கணமே இலங்கை ராணுவம் தமது முகாமுக்கு திரும்பும் என்றும் மன்னிப்பு வழங்கப்படும் இளைஞர்கள் சமாதான பேச்சுக்கு தங்கள் பிரதிநிதிகளை அனுப்பமுடியுமென்றும் திட்டவட்டமாக சொல்லியிருக்கிறார்.

ஆனால் பேச்சின் புதுமை இந்தியா பற்றிய கண்டனம் எள்ளவும் இல்லை இந்த சமரச முடிவுக்கு இந்தியாவே உதவ முன்வரவேண்டுமென கேட்டிருக்கிறார்.

''பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவோம்; தமிழருக்கு எதிரான போர் அல்ல இதுஎன்ற முரண்பாடும் நாடடைககாக்க இளைஞர் முன்வாருங்கள். இந்தப் 'போரை' எவ்வகையிலும் வென்றேஆகவேண்டுமென்ற ஆழமற்ற, கோல்வி ததும்பும் ஆவேசப் பேச்சுக்கள் பிரதமரின் வாயிலிருந்து என்றும் வரவில்லை.

அவருக்குண்டான ஒரே ஒரு 'அலர்ஜி' திருமதி பண்டாரநயக்காவின் வருங்கால அரசியல்; நாட்டின் இன்றைய பிரச்னை இதுவே என்ற பாங்கில் பாராளுமன்றம் நடைபெறுகின்றது என்னே நாட்டின் அரசியல் முதிர்ச்சி! அதனை ஒருபுறம் விட்டு பிரதமர் பிரேமதாசா வற்புறுத்தும் 'யுத்தமுடிவுக்கும்' சமாதான தீர்வுக்கும் இந்தியா ஆவனசெய்வதே அழிவைத் தடுக்கும் அவசிய முயற்சி.

---

வடக்கு, கிழக்கில்

# விரைவில் தேர்தல்

# ஐ.தே.க. செயற்குழு முடிவு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சில தேர்தல் தொகுதிகளில் விரைவில் தேர்தல் நடத்துவது என்று ஐ தே கட்சி செயற்குழு முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் கூடிய இக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது

மன்னார், வவனியா, முல்லைத்தீவு, திருக்கோணமலை, பட்டிருப்பு ஆகிய தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் நடத்துவதற்கு இதுதக்கதோர் சந்தர்பம் என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இக்கூட்டத்தில தெரிவித்ததாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன

வவனியாவுக்கு ஒரு சிங்கள வேட்பாளரையும் மன்னாருக்கு ஒரு முஸ்லிம் வேட்பாளரையும் நிறுத்த ஐ தே. கட்சி செயற்குழு முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற மகியங்கனை இடைத்தேர்தலில் ஐ. தே. கட்சிக்கு எதிராக செயல்பட்டமை குறித்து அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கட்சியின் தலைமைச் செயலகத்தை கொள்ளுப்பிட்டியில் இருந்து புதிய தலைநகரான கோட்டைக்கு இடமாற்றம் செய்வது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## யாழ். நகர மண்டபம் முற்றாக இடிக்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர மண்டபம், இனிமேல் பாவிக்க முடியாதளவு சேதமடைந்துள்ளதால் கட்டிடம் முழுவதும் இடிக்கப்படவிருக்கிறது.

பாதுகாப்புக்காரணத்தினால் கட்டடம் முழுவதும் இடிக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக் கட்டிடத்தில், பாவிக்க கூடிய நிலையில் உள்ள கூரை சீட்டுக்கள், கதவுகள். யன்னல்கள் நேற்று அகற்றப்பட்டன.

கட்டிடம்இடிக்கப்பட்ட பின்னர் கழிவுகளை வேறு இடங்களுக்கு அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1935 ம் ஆண்டு கட்டப்பட்ட நகரமண்டபம், கடந்த மாதம் 10ம்தேதி நடந்த தாக்குதலின் போது தகர்க்கப்பட்டது. இதனை தொடர்ந்து யாழ். மாநகர சபை அலுவலகம், சிறும்பியடியிலுள்ள மாடிக்கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

குண்டினால் தகர்க்கப்பட்ட சுகாதர பகுதி கட்டிடமும் இடிக்கப்படவிருக்கிறது. (க)

## மற்றுமொரு அலுவலகம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர மண்டபத்திற்கு எதிரிலுள்ள மின் பொறியியலாளர் அலுவலகம் வேறுஇடத்திற்கு மாற்றப்படவிருக்கிறது.

நகர மண்டபம் தாக்கப்பட்டபோது, இந்த மேல்மாடிக்கட்டடமும் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது

இங்குள்ள ஊழியர்கள் பாதுகாப்புக் காரணமாக, அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றுமாறு கோரியுள்ளனர்.

இந்த அலுவலகத்திற்கு பொருத்தமான இடம்தேடப்பட்டு வருகிறது. [க]

## வைத்திய கலாநிதி கணேஸ்வரன் இன்று தொடக்கப்பேருரை

[யாழ்ப்பாணம்]

பல்கலைக் கழகங்களில் புதிதாக நியமனம் பெறும் பேராசிரியர்கள் தத்தம் துறைசார்பான தொடக்கப் பேருரை நிகழ்த்தும மரபிற்கிணங்க யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட மனநோயியற் பேராசிரியராக நியமனம் பெற்ற வைத்திய கலாநிதி கணேஸ்வரன் அவர்களது தொடக்கப் பேருரை, துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களது தலைமையில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் இடம்பெறும்.

# பிரிட்டன் விஜயம்:

## தூதரக அதிகாரி தகவல்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து எவரும் இலகுவாகப் பிரிட்டனுக்குச் செல்லலாம் என்ற செய்தி உண்மைக்குப் புறம்பானது என்று பிரிட்டிஷ் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், பிரிட்டிஷ் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தமது குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டு முறைகளில் எந்தவித மாற்றமும் கொண்டுவரவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைப் பிரஜைகள் மிக இலகுவாகப் பிரிட்டனுக்குச் செல்லமுடியுமென்றுதற்போது வெளிவந்த செய்தி வதந்தி என்றும். அது உண்மைக்குப் புறம்பானது என்றும் கூறப்படுகிறது.

## பலாத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 13ம் திகதி நண்பகல் 12 மணிக்குத் தனது வீட்டுப் பின் வேலியால் மூன்று அல்லது நான்கு பேர் சோதனையிட வந்ததாகவும், மற்றவர்கள் செல்ல, ஒருவர் மட்டும் நின்றதாகவும் குசினியில் தான் இருந்தபோது பெட்டியைச் சோதனையிட வேண்டும் என்று கூறிக் கையைப் பிடித்திழுதது வீழ்த்தியதாகவும், அப்நேரம் தான் சோட்டியும், பாவாடையும் அணிந்திருந்ததாகவும், தனது 4 வயதுப் பிள்ளையிருக்கும்போது தன் மீது பலாத்காரம் செய்ததாகவும் அவர் பின் எழுந்து உடைகளைச் சரிசெய்து கொண்டு முன்பக்கத்தால் சென்று அங்குநின்ற வாகனத்தில் ஏறிச் சென்றுவிட்டதாகவும் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் அந்பெண் கூறியுள்ளார்.

சோதனையிட வந்தவர் தொப்பியையும், துவக்கையும் வைத்துவிட்டே தன்னுடன் தவறுன நடந்துகொண்டதாகவும் அவர் பொலிஸிடம் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தின் பின் அருகிலுள்ள சகோதரி வீட்டிற்குச் சென்று சகோதரிக்குத் தெரிவித்தகாகவும் பின்னர் கணவருக்குத் தெரிவித்த பின், கோப்பாய் முன்னாள் எம். பி திரு. எம். ஆலாலசுந்தரத்திடம் தெரிவித்து அவரிடம் கடிதம் வாங்கி அரசாங்க அதிபரைச் சந்தித்ததாகவும், பின்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், பொலிஸ் வாக்கு மூலத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

மேசன் தொழில் பார்க்கும் கணவன் வேலைக்குச் சென்றிருந்ததாகவும் மற்ஒருபிள்ளை அந்நேரம் அருகிலுள்ள சகோதரி வீட்டிற்குச் சென்றிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ''மதத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்டவர்கள்''

### முஸ்லிம் அபி. சங்கம் அறிக்கை

(வவனியா)

''தமிழ் முஸ்லிம் ஒற்றுமையை எச்சக்தியாலும் பிரிக்க முடியாது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழர்களும் முஸ்லிம்களுமாவர். தமிழ்ப் பேசும் இனம் என்னும்போது ஒருவட்டத்தினுள் இருப்டவர்கள் மதத்தால் வேறுபட்டிருந்தாலும் மொழியால் ஒன்றுபட்டவர்கள் என்றுஅர்த்தம்'' என்று வவனியா மாவட்ட முஸ்லிம் அபிவிருத்திச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் நல்வாழ்வு பெறவும், சமூக மக்களுக்கிடையில் ஒற்றுமை, சமாதானம், ஐக்கியம் வளர வேண்டுமென்றும அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

செயலாளர் ஜனாப் எம். காசிம், உப தலைவர் ஜனாப் எம். யூசுப் இருவரும் அந்த கூட்டறிக்கையில் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ளனர்.

## ''பாடசாலைகளை பேதமின்றி முன்னேற்றும் பணிப்பாளர்''

[யாழ்ப்பாணம்]

''பின்தங்கிய பாடசாலை பெரிய பாடசாலை என்ற வேறுபாடின்றி சகல பாடசாலைகளும் சமத்துவமாக முன்னேற வேண்டுமென்ற நல்லெண்ணம் உள்ளவர் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை. அதேபோன்று பாடசாலைப் பெயர்மாற்றம், தளபாடங்கள் பற்றாக்குறை போன்ற எமது கோரிக்கைகளை யாழ் கல்விப் பணிப்பாளரும், நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு சு. சிவநாயகமூர்த்தியும் இன்று நிறைவேற்றித் தந்துள்ளனர் இவ்விருவருக்கும் நாம் சபை

(5ம் பக்கம் பார்க்க)

# ரஜீவ் மீதான கொலைமுயற்சி

# அமெரிக்காவில் முறியடிப்பு!

## 7 சீக்கியர்கள் 'எவ். பி. ஐ. யினுல் கைது



(புதுடில்லி)

இந்தியப் பிரதம மந்திரி திரு. ரஜீவ் காந்தியைக் கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டம் ஒன்று அமெரிக்காவில் முறியடிக்கப்பட்டுள்ளது. சீக்கிய தீவிரவாதிகள் இச்சதியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி அடுத்த மாதம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளார். அப்போது அங்குவைத்தே அவரைக் கொலைசெய்வதற்குச் சதிசெய்யப்பட்டிருந்தது.

அமெரிக்க 'எவ். பி. ஐ.' புலனுய்வுப் பிரிவினரே இச்சதி முயற்சியை முறியடித்துள்ளனர். இதுகுறித்து மேலும் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எவ். பி. ஐ யின் தலைவர் திரு. வில்லியம் வெப்ஸ்ரர் தெரிவித்துள்ளார்.

ரஜீவ் கொலைச் சதி அம்பலமானதையடுத்து 7 சீக்கியத் தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஹரியானு முதலமைச்சர் திரு. பஜன்லால் மீதும் அமெரிக்காவில் கொலை முயற்சியொன்று மேற்கொள்ளப்படவிருந்தது.

இவர் தற்போது அமெரிக்காவில் கண் சிகிச்சை பெற்றுவருகிறுர். நியூஓளியன்ஸ் நகரில் இவர் தங்கியுள்ள ஹோட்டல் ஒன்றின் அருகே இம்மாத ஆரம்பத்தில் நான்கு சீக்கியர்கள் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டனர்.

இதனையடுத்தே பிரதமர் ரஜீவ் மீதான கொலைச் சதியும் அம்பலமாயிற்று. சதிகாரர்கள் மீது ராஜதுரோகக் குற்றச்சாட்டு, பயங்கர ஆயுதங்களை வைத்திருந்தமை போன்ற குற்றச் சாட்டுகளின்கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (கி)

---

பயங்கரவாதிகளை ஒதுக்கி——————

# வேறுசீக்கியர்களுடன் சமரச பேச்சுக்களைநடத்துவோம்!"

## லோக்சபாவில் ரஜீவ்பேச்சு

புதுடில்லி, மே. 14

''பயங்கரவாதிகளை ஒதுக்கி அவர்களைப் பொருட்படுத்தாது வேறு சீக்கிய சாராருடன் சமரச முயற்சிகளை மேற்கொள்வோம்'' என்று இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி கூறியுள்ளார்.

லோகசபையில் அவர் நேற்று உரை நிகழ்த்தியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. காந்தி தொடர்ந்து பேசியதாவது:-

''பயங்கரவாதிகள் பயங்கரவாதிகளாகவே இருக்கட்டும். நாமும் அவர்களை ஒடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

இதேவேளை சீக்கியர்களின் பிரச்னைகுறித்து பயங்கரவாதிகள் தவிர்ந்த வேறு சீக்கியர்களுடன் சமரசப் பேச்சுக்களை நடத்துவோம்.

ஏராளமான சீக்கியர்கள் பயங்கரவாதிகளைப் பகிரங்கமாகக் கண்டிக்க ஆரம்பித்துவிட்டார்கள் இது பாராட்டப்படவேண்டியதொன்றுகும்.

இந்தியாவின் உள்விவகாரங்களில் வெளிச் சக்திகளின் தலையீடு இருப்பதாக அரசு குறிப்பிட்டபோது அதனை எதிர்க்கட்சிகள் நையாண்டி செய்தனர் ஆனுல் அவர்களே தற்போது இத்தலையீடுபற்றி அதிகம் கவலைகொள்கிறுர்கள்'' என்றுர். (கி)

---

## காரைநகர் மக்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் பாதிப்புற்ற பல்வேறு வழிகளிலிருந்தும் கிடைக்கும் உதவிகளை ஒருமுகப்படுத்தி தகுந்த முறையில் பயன்படுத்த காரைநகர் பிரஜைகள்குழுவுடன் சகல பொது ஸ்தாபனங்களும் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அகதிகள் புனர்வாழ்வுக்கான பொறுப்புகளை காரைநகர் பிரஜைகள்குழு ஏற்றுள்ளபடியால் இதுவரை தனியாரும் பொது ஸ்தாபனங்களும் சேகரித்த நிதி, பொருள் ஆகியவற்றை கையளிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (மா)

---

## "தோட்டப்பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவியவர்"

[கொழும்பு]

''தோட்டப்பாடசாலைகளில் நீண்டகாலமாகப் பணியாற்றி பின்தங்கிய நிலையிலிருந்த தோட்டப்பகுதி மாணவர்களின் கல்விவளர்சிக்கு அயராது பாடுபட்டவர்களில் ஆசிரியர் திரு. நா. தியாகராசாவும் ஒருவராவர். அவரது ஆசிரியப் பணி இப் பிரதேசத்தில் சிறப்பாக அமைந்திருந்தது. அவர் ஆசிரியர் சேவையில் தலை சிறந்து விளங்கினுர்.''

மலையக தமிழ்ப் பாடசாலைகளில் கடந்த 25 ஆண்டுகளாக கடமையாற்றிதற்போது யா/சித்தங்கேணி கணேச வித்தியாசாலைக்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும் திரு. நா. தியாகராசாவுக்கு மத்துகம தேர்தல் தொகுதியைச் சேர்ந்த மத்தெகெதர ஸ்ரீ முத்துமாரிஅம்மன் ஆலய முன்றலில் நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தில் பேசிய தேசிய தோட்டதொழிலாளர் காங்கிரஸ் மத்தெகெதர தோட்டக் கமிட்டி தலைவர் திரு எம். சுப்பிரமணியம் தெரிவித்தார்.

திரு. எஸ். வெள்ளைச்சாமி, திரு எஸ் கருப்பையா, திரு. கே. ஏ ஆர்தா, செல்வன் ஆ. சண்முகம் ஆகியோர் ஆசிரியரின் சேவையை பாராட்டிப் பேசினர்.

ஆசிரியர் திரு. நா. தியாகராசா தனது நன்றி உரையில்: மாணவர் நல்லொழுக்கமும், நற்பண்பாடும், நல்லறிவும் பெற்றுத் திகழவேண்டுமாயின் ஆரயபத்தில் இருந்தே அவர்களுக்குச் சமயபாடம் போதிக்கப்பட வேண்டும் பல இன்னல்களுக்கும் மத்தியில் சிரமப்பட்டு எனக்குப் பிரியாவிடை கூறியமைக்கு எனது நன்றியை தெரிவிக்கின்றேன் என்றுர்

---

## இன்றைய பலன்

வைகாசி—2[15-5-1985]
புதன்
திதி—ஏகாதசி முன் இரவு வரை
நக்ஷத்திரம்—உத்தரட்டாதி பின் இரவு வரை

மேடம்:- கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாது திண்டாடுவீர்கள் வரவிலும் மந்தமுண்டு.

இடபம்:- சகோதரர்களினல் சுகமும் சஞ்சல நிவர்த்தியும் உண்டு

மிதுனம்:- வாகன சுகக் குறைவும் வரவிலும் மந்த நிலையும்உண்டு பொருட் செலவுக்கும் இடமுண்டு.

கடகம்:- புத்திரவழி சுகமும் வித்தை மேன்மையும் இனசனக் கொண்டாட்டமும் உண்டு

சிங்கம்: சந்துருவால் கடுதியும், சரீரசுகக் குறைம் உண்டு அவதானம் வேண்டும்.

கன்னி; வாழ்க்கையில் வசந்தம் வீசும் வளமான திருப்பமும் ஏற்படும்.

துலாம்: உங்கள் விடயங்கள் அனைத்தும் இன்று வேவு பார்க்கப்படும்.

விருச்சிகம்: தக்கசமயத்தில் முதியவர் ஒருவரின் உபதேசம் கிடைக்கும்.

தனுசு:- கடமையாற்றுமிடத்தில் கவனம் வேண்டும் கருத்து வேற்றுமைக்கும் இடமுண்டு.

மகரம்;- மூத்த சகோதரர் ஒருவருடையவிடயமாக முயற்சிக்கு இடமுண்டு.

கும்பம்:- அன்னிய நபர் ஒருவரால் ஏமாற்றப்படுவீர்கள். நிதானம் நன்று.

மீனம்:- எதற்கெடுத்தாலும் ஆதிரப்படுவீர்கள் அமைதி வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

---

## குருநகரில் வங்கிகள் ஸ்தம்பிதம்

[யாழ்ப்பாணம்]

குருநகரில் இயங்கிவந்த வங்கிக் கிளைகள் மூடப்பட்டதால் ஓய்வூதியம் மற்றும் பணக்கொடுக்கல் வாங்கல் தொடர்புகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

பாதுகாப்பின்மை காரணமாக அங்கு இயங்கிவந்த வங்கிக் கிளைகள் கடந்த 10ம் திகதி தொடக்கம் மூடப்பட்டுள்ளன. கோட்டைக்கு அருகாமையிலுள்ள விளையாட்டரங்கில் வங்கிக் கிளைகள் இயங்கவிருப்பதும் தெரிந்ததே

இம்மாதம் 20ம் திகதி தொடக்கம் யாழ் கோட்டைக்கு அருகாமையில் உள்ள கட்டிடத்தில் வங்கிக் கிளைகள் இயங்கவுள்ளதாகத் தெரியவருகிறது. (மா)

---

## இந்திய தேர்தல்களில் அநாவசிய வேட்பாளர்களை தவிர்க்க ஆலோசனை!

புதுடில்லி, மே 14

தேர்தல்களில் அனுவசியமாக வேட்பாளர்கள் போட்டியிடுவதைத் தவிர்க்கும் வகையில் இந்திய தேர்தல் கமிஷன் பல ஆலோசனைகளை மத்திய அரசுக்கு வழங்கியுள்ளது.

தேவையற்ற, மேலதிகமான வேட்பாளர்களைத் தவிர்க்கும் வகையில் கட்டுப் பணத்தின் தொகையைக் கூட்டவேண்டுமெனவும் சிபார்சுசெய்யப்பட்டுள்ளது.

இதுதவிர மோசடிப் பேர்வழிகள், மற்றும் நடத்தைகெட்டவர்கள் ஆகியோர் தேர்தல்களில் குதிப்பதைத் தவிர்க்க வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது (கி)


---

## வர்த்தகரை விடுவிக்கும்படி விற்பனைப்பிரதிநிதிகள் வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ். வி முருகேசுவை எதுவித நிபந்தனையுமின்றி மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக விடுதலை செய்யும் படி யாழ். மாவட்ட விற்பனைப் பிரதிநிதிகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

யூனியன் கார்பைட் சிலோன் லிமிட்டெட், நேஸ்லே லங்கா லிமிட்டெட், லீவர் பிறதர்ஸ் சிலோன் லிமிட்டெட், ரெக்கிட் அன்ட் கொலமன், லங்கா மில்க் பூட்ஸ் -சோவலர்ஸ், டெஸ்மேஜ், ஜோன் ஒவர்ஸிஸ் லிமிட்டெட், மக்லூட்ஸ் வின்த்துறம் லிமிட்டெட் ஆகிய நிறுவனங்களின் விற்பனைப் பிரதிநிதிகள் மேற்கண்ட வேண்டுகோளை கூட்டாக விடுத்துள்ளனர்.



விஞ்ஞான முறையில் தையற்கலை கற்பிக்கப்பட்டு சித்தி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கிய வைபவத்தில், நிறுவனத் தலைவர் வணக்கத்துக்குரிய எஸ். அல்பேர்ட் அன்ரனி மாணவிகள் மத்தியில் இருப்பதை இங்கு காணலாம்.
(படப்பிடிப்பு: எஸ். செல்வலிங்கம்)

ரீகல் மினி
தினசரி 10-30 மட்டும்
EAGLES ATTACK AT DAWN
(War Film)

ஆனந்தி
வீடியோ சினிமா
[மனோகராவில்]
தினசரி 10-30. 2-30
பிரபு - நளினி நடித்த
நியாயம்
[கலர்]

முருகன் மினி
(இருபாலைச்சந்தி)
தினசரி 10-30, 2-00, 4-30
9 முதல் 10 வரை
கொலுசு
11 முதல் 12 வரை
சுமது என் சுந்தரி

ஸ்ரான்லி மினி
(சினிமா)
10-30, 2-30,
ரஜனி - விஜி- சில்க்சுமிதா
நடித்த
சித்திரமே சித்திரமே
5'X5' திரையில்

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-00
கமலஹாசன்- ஜெயபிரதா
மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின்
மிகச்சிறந்த படம்

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
மு. ப 10-30 பி. ப. 2-00
மோகன்-கீதா
(இரட்டைவேடம்)
கல்யாணமானவரே
சௌக்கியமா

4-30 P. M.
OPERATION LEOBIRD
(War Film)

லிடோ சினிமா
சுதாகர் - ராதிகா
நடித்த
ஆயிரம வாசல்
இதயம்
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
பாக்கியராஜ் - சரிதா
நடித்த
மௌன கீதங்கள்
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி

மொடேர்ண்
மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சக லேன்
ராஜா தியேட்டருக்கு
அருகாமையில்)
13-5-85 முதல்
Dracula
ரகுலா
சிறந்த நடிப்பும், பாலி
யல் காட்சியும் நிறைந்
தது.
மிகக் கண்டிப்பாக
வயது வந்தவர்களுக்கு
மட்டும்.
ஆசனங்களுக்கு முந்
துங்கள்.


## படுகொலை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யர் வி. கே. கணேசலிங்கம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனவுக்கு பருத்தித்துறை பிரஜைகள் குழுவினர் எழுதியுள்ள கடிதத்தில் பதற்றநிலையைத் தொடர்ந்து சுமார் 10 000 மக்கள் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறி அயல் கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளதாகவும், பாடசாலைகள் வங்கிகள், காரியாலயங்கள், சந்தை, கடைகள் யாவும் அச்சத்தினால் பூட்டப்பட்டுள்ளதாகவும், இப்பகுதியெங்கும் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு மாணவன் கதிரவேற்பிள்ளை இரகுபதி (18 வயது), மாணவன் குகநேசன் குமரேசன் (17 வயது , ஆசிரியை திருமதி செல்வராணி ஜோன்பிள்ளை 55 வயது). மாணவன் பொன்னம்பலம் சந்திரகுமார் (21 வயது), தேவசகாயம் வென்ஸெஸ்லோஸ், தேவசகாயம் சவுந்தரநாயகம், மரியதாஸ் சின்னத்தம்பி, செல்வநாயகம் ரவீந்திரன் ஆகியோர் பலியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியை சந்தித்தபோது கையளித்த மகஜரில் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இன்று முக்கியமான முதல் பிரச்சினையாக இருப்பது இலங்கைத் தமிழர் பிரச்சினைதான். இதற்கு விரைவான தீர்வுகாண்பதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்மகஜரில் கூறப்பட்டுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் கமிஷன். ஐரோப்பிய பாராளுமன்றம் போன்ற உலகமேடைகளில் இலங்கைப் படுகொலைகள்பற்றி இந்தியா குரல் எழுப்பவேண்டுமென மகஜரில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பான ஆலோசனையை தெரிந்தெடுத்த அரசியல் தலைவர்களை அழைத்து இணக்கப் பேச்சு நடத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.


லதா மினி
(கோண்டாவில்)
சிரஞ்சீவி நடித்த
துப்பறியும் சிங்கம்

ஹரன் சினிமா
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
விதி
(கலர்)

வின்ஸர்
தினசரி 10-30, 2-00
4-15
Lee Van Cliff,
Ernest Borgnine in
ESCAPE From NEW YORK

யாழ். வின்ஸர் மினி
தினசரி: 10-30, 2-30
மோகன்—கீதா நடித்த
"கலியாணமானவரே
சௌக்கியமா"


# தாக்குதலுக்கு வயோதிபர் பலி!

(யாழ்ப்பாணம்)

பள்ளிக்குடாவைச் சேர்ந்த 62 வயதான மடத்தீன் அலெக்சாண்டர் என்ற வயோதிபர் தாக்குதலுக்குப் பலியானார்.

பூநகரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்ற போது அங்கு டாக்டர் இல்லாததினால் காரில், கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு, நிலைமை மோசமானதால் அம்புலன்ஸில் யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு அங்கு மரணமானார்.

யாழ் உத்தியோகப்பற்றற்ற நீதிபதி ஏ. அன்ரனி மரண விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் மனைவி புலோமினா சாட்சியமளிக்கையில் இம்மாதம் 11-ம் தேதி கணவன், பூநகரிக்குச் சென்று சாமான்கள் வாங்கி வந்த போது வீட்டில் சந்தேக நபர்களான சந்திரன், அரசரத்தினம் நாதன், பேபி ஆகியோர் நின்றதாகவும் 'என்னடா கதைகிறாய்' என்று கூறி அரசரத்தினம் கூரிய ஆயுதத்தினால் குத்தியபின் நால்வரும் ஓடிவிட்டதாகவும் கூறினார்.

அயலவரான யோகன் என்பவரின் உதவியுடன் கணவனை ஆஸ்பத்திரியில் சேர்த்ததாகவும் கூறினார்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுத் தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க)



## அறிவாளிகளுக்கு தலைவணங்குபவர்

மண்டைதீவைப் பிறப்பிடமாக கொண்ட திரு வேலுப்பிள்ளை இராசரத்தினம் விபத்தில் மரணித்துஇன்று ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. இன்றையகாலகட்டத்தில்இவரைப் பழகித்தெரிந்தவர்கள் இவரை நினைக்காமல் இருக்கமாட்டார்கள்.

தீவுப்பகுதி முதல் வன்னிநாடு வரை மண்டைதீவு இராசரத்தினம் என்றால் தெரியாதவர்கள் மிகக் குறைவு. தேர்தல் காலங்களில் இவர் எந்தப்பக்கம் என்று பலர் கேட்பார்கள். அரசியலில் எந்தப்பக்கத்திற்கும் நின்று வாதிட்டு, தனது கருத்தை மற்றவர்கள் மறுக்கமுடியாமல் ஏற்கவைக்கும் திறமைமிக்க இவரை தேர்தல் காலத்தில் தேடித்திரியும் அரசியல் வாதிகள், தலைவர்கள் பலர் இருந்தனர். அவர்களும் இன்று இவரை நினைப்பார்கள். மறுமலர்ச்சிக் கருத்துக்கள் நிறைந்த இவர் கிராம மட்டத்தில் ஒடுக்கப்படும். நசுக்கப்படும், சம்பவங்களுக்கெதிராக எந்த விளைவுகளையும் எதிர்கொண்டு சாதாரண மக்களுக்காக நீதிகோரி உதவுவதில் முன்நிற்கும் இவர் சரியெனப்பட்டதை எங்கும் துணிந்து சொல்லத்தக்க நாவன்மை கொண்டவர். பல அரசியல் மேடைகளையும், இலக்கிய மேடைகளையும் சாதாரணமாகக் கண்ட ஒரு சாதாரண மனிதனாக இருந்தாலும், பெரியவர்களுடனும் வாதிடும் ஆற்றல் நிறைந்தவராக இருந்தும், அறிவாளிகளுக்கு தலைவணங்கி வந்தவர்.

— சி. பாலசிங்கம்

## நேற்றும்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அதிகாலை 4 மணியளவில் இருஹெலிகொப்டர்கள் குறிப்பிட்ட பகுதிகளின் மேல் தாளப்பறந்து நிலைமைகளை அவதானித்தது.

இச்சோதனையின்போது சிலர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதாகவும், சிலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் வரை சோதனை நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. தெல்லிப்பழை, மல்லாகம் பகுதிகளிலும் நேற்றுச் சோதனை இடம்பெற்றது [மா]

## மூடப்பட்டது

[கொழும்பு]

கண்டி தலதா மாளிகையின் பிரதான வாயில் பாதுகாப்புக் கருதி மூடப்பட்டுவிட்டது. தியவதன நிலமையும் பொலிஸாரும் ஆலோசித்து இந்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## பாடசாலை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கவேண்டும்" என்று ஓய்வு பெற்ற ஆணையாளர் திரு.என். வாமதேவா கூறினார்.

யாழ் வண்ணார்பண்ணை இளையதம்பி வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டம் அதிபர் கா கணேசதாசன் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் தலைவர் பேசும்போது.இது எமது பாடசாலை வாரத்தில் பல ஆயிரம் ரூபா பெறுமதியான வேலைகளை செய்தளித்த பெற்றோருக்கும், நூலக அங்குரார்ப்பணம் தமிழ்த் தினப் பரிசளிப்பு விழா போன்றவற்றைச் சிறப்புடன் நடாத்த உதவிய நன்கொடையாளர்களையும் பாராட்டினர்.

## நன்றி நவிலல்

மலர்வு:
30-8-1942

உதிர்வு:
9-5-1985



### கி சிவக்கொழுந்து

கரணவாய் - தெற்கு. புருப்பொறுக்கி பிரபல "சிவா" பொடி வேக்ஸ் உரிமையாளர் திரு கி சிவக்கொழுந்து 9-5-85ல் அமரரானார். அவரின் இறுதிச்சடங்குகளில் பங்கு கொண்டஅனைவருக்கும் "கொழுந்து"வின் குடும்பத்தினர் தமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றனர்

மனைவி, மக்கள், குடும்பத்தினர்.

(3262)

## காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### காரைநகர் வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திர மூலம் விற்பனை

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தில் 4000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு உண்டு. சாக்குகளை பெறவிரும்புவோர் ரூப 250/- ஒப்பந்த முற்பணமாக வைப்பு செய்து தலைமைக் காரியாலத்தில் விண்ணப்ப படிவத்தை பெற்று 25-5-85 நண்பகல் 12 மணிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

பொது முகாமையாளர்
ப. நோ. கூ. சங்கம், காரைநகர்
3265

சி. கனகரத்தினம்,
ஜே. பி. யூ. எம்.
உதவியாளர்:
கனகரத்தினம் கேசவன்,
ஜே. பி. யூ. எம்.,
சட்டத்தரணிகளும்,
பிரசித்த நொத்தாரிசுகளும்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கு, கல்வியங்காடு என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற விசுவநாதர் சின்னத்தம்பி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

விசுவநாதர் சின்னத்தம்பி கைம்பெண் பாலசவுந்தரி,
'கிருஷ்ணபவன்'
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

— மனுதார்.

மரண சாதன வழக்கு } இல T / 3834

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதெனஇத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985-ம் ஆண்டு வைகாசி மாதம் 17ந்ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்குஇந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்கு காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஒப்பம்
கு. குலசிங்கம்.
பதிவாளர்

என்னால் வரையப்பட்டது.
ஒப்பம்

க. கேசவன்,
மனுதாரின் சட்டத்தரணி

1985-ஆம் ஆண்டு சித்திரை மாதம் 25-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

3253

## மரண அறிவித்தல்

### செல்வி ஜெனிற்ரு வேர்ஜினி

செல்வி ஜெனிற்ரு வேர்ஜினி ஏபிரகாம் அமலனடி எய்திவிட்டார். அன்னார் ஏபிரகாம் [சின்னத்துரை], எலிசபெத் ஆகியோரின் அருமை மகளும், விக்டோரியா, தர்மலிங்கம், காலம் சென்ற மாரிகிறெற், நவரட்ணம், ஜெயரட்ணம், சௌந்தரநாயகி, பத்மநாதன், தர்மரட்ணம், செல்வரெட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விக்ரர் தர்மலிங்கம், பத்மநாதன், சுசிலா நவரட்ணம், அரியமலர் ஜெயரட்ணம், ஆகியோரின் மைத்துனியும், பற்றிக் தர்ஷன், தர்மி, சாம்சன் ஆகியோரின் சிறிய தாயாரும், ஜெக்சன், லியோனி ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக 15-5-85 புதன்கிழமை [இன்று] காலை 10 மணிக்கு இல்லத்திலிருந்து மல்லாகம் கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்,

குடும்பத்தினர்

தேவாலய வீதி, மல்லாகம்.

3270

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சுந்தரம்

மானிப்பாய் தெற்கு

மானிப்பாய் தெற்கு ஆறுமுகம் சுந்தரம் அவர்கள் 14-5-85 செவ்வாய் காலமானார். இவர் இராசமணியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற விமலாராணி, ஜெயபூரணதேவி, சிவக்குமாரன் [உரிமையாளர் சுந்தர்சன் எலக்ரிக்கல்ஸ் மானிப்பாய்] ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சிறினிவாசன், கமலாதேவியின் அன்பு மாமனாரும், சிறிதர், சிறிரூம், சிறிஜெயந்தி, சிறிதர்ஷினி, பிரதீபன், சியாமினி, ரொபிகாவின் அன்புப் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் இன்று புதன் 15-05-85 பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

3281 மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### சிவகுரு சுப்பிரமணியம்

சுந்தரம்பிள்ளை மரக்காலையில் கடமையாற்றும் சிவகுரு சுப்பிரமணியம் [மணி அப்பா] காலமாகிவிட்டார். இவர் சிவபாக்கியத்தின அன்புக் கணவரும், கணேஸ்வரி. விக்றேஸ்வரி, கணேஸ்வரன, ஞானசேகரம் ஆகியோரின் தகப்பனும், ராம், சோமேஸ்வரியின் மாமனாரும், கேமமாலினி, கமலநாதன். ருபாஜினி, சுபேஜினி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 12, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து [15-5-85] இன்று காலை பத்து மணிக்கு வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி திருமதி சிவபாக்கியம்

3279

## மரண அறிவித்தல்

### சிவசுந்தரம் ஜெகதீசன்

அச்சுவேலி தெற்கு செட்டிய குறிஞ்சியைச் சேர்ந்த சிவசுந்தரம் ஜெகதீசன் காலமானார் (செட்டியார்) அவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் ஏ. சிவசுந்தரத்தினதும் திருமதி வள்ளியம்மை அவர்களின் சிரேட்ட புத்திரரும், ஸ்ரீபராபரன், திருமதி தவமணி, காலம் சென்ற ஸ்ரீநந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி வேதநாயகி திரு செ. சிவானந்தன் ஆகியோரின் அருமை மைத்துனரும், விஜயலட்சுமி, சிவசுந்தரம், தயாராணி, சிவதாஸ் ஆகியோரின் பெரிய தந்தையும் திருவாளர்கள் பொ. சிவகுரு, பொ. வேலும்மயிலும் ஆகியோரின் மருமகனும் காலம்சென்ற மனோன்மணி பேரம்பலம் அவர்களின் பெருமகனும், செட்டித்தெரு பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி த. இராசேஸ்வரியின் ஒன்றைவிட்ட சகோதரருமாவர்.

இறுதிக்கிரியைகள் 15 - 05 - 1985 புதன்கிழமை (இன்று) காலை 10 - 00 மணியளவில் ஆவரங்கால் குடும்ப மயானத்தில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உள்ளூர் உறவினர் யாபேரும் ஏற்றுக் கொள்ளவும்.

சி. ஸ்ரீ பராபரன்.

3271

## அரசாங்க அதிபர் அறிக்கை

[கொழும்பு]

வடபகுதியில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களடங்கிய அறிக்கையை, யாழ். அரசாங்க அதிபர், உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## தீவிரவாதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளாம். ஆனல் மகாபோதி வெள்ளரசு மரத்திற்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை.

### பொலிஸ் நிலையம் தாக்குதல்

இதன்பின்னரி அக்கோஷ்டி புத்தளத்தை நோக்கி விரைந்தார்கள் என்றும் வழியில் நொச்சியகம பொலிஸ் நிலையத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு பொலிஸ்காரர் காயமுற்றதாகவும் கூறப்பட்டது

வில்பத்து வனவிலங்கு பாதுகாப்பு இடத்தைநோக்கி பின்னர் இவர்கள் சென்று மருதங்கடவை என்ற இடத்தில் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் என்றும் அறிக்கை கூறியது.

பயங்கரவாதிகள் ஏனைய பகுதிகளில் இருக்கும் மக்களை ஆத்திர மூட்டுவதற்காகவே இத்தகையதாக்குதல்களை நடத்தியதாகவும் ராஜாங்க அமைச்சு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களை அமைதியாக இருந்து ஒத்துழைக்கும்படியும் மேலும் அவ் றிக்கை கோரியது.

## பஸ்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அதேபோல் கொழும்பிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட பஸ்களும் இடைநடுவில் மீண்டும் கொழும்புக்குத் திரும்பிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது இவைகளில் சிலபஸ்கள் கல்வீச்சுக்கிலக்கானதாகவும் கூறப்படுகிறது.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்தே யாழ்-கொழும்பு போக்குவரத்துச் சேவை தடைப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (மா)

## இன்று கச்சேரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வூதியம் வழங்கப்படும்.

16ம் திகதி 123ம் பக்கம் தொடக்கம் 166ம் பக்கம் வரையுமுள்ளவர்களுக்கும், 17ம் திகதி விதவைகள், அனாதைகள், ஆசிரிய விதவைகள் ஆயுதப் படையினர் போன்றோருக்கான ஒய்வூதியம் வழங்கப்படும்.

## காலமானர்

### இ. பிரேமபகீரதன்

இ. பிரேம பகீதரன் (Jaffeerjee Brothers காலமானர். இவர் திரு. பொ. இராசரத்தினம் (உதவி அத்தியட்சகர் அரசாங்க விநியோகத் திணைக்களம்), அழகம்மா [ஆசிரியை சித்திவிநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை] ஆகியோரினது அன்பு மகனும், பிரேமஜயந்தி(Mascons), பிரேமதசரதன் (Maharaja's) பிரேமசந்திரன் [பொறியியல் பீடம், பேராதனை], பிரேமசுகந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் புதன்கிழமையன்று [15, வைகாசி] 10 மணியளவில் நடைபெறும். No:- 5. Castle Lane, பம்பலப்பிட்டி.

3282

## குருநகர் தொடர்மாடி வீடுகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர் மாடிவீடுகளை பெறுவதற்கான விண்ணப்பங்கள், குருநகர் கிராமசேவையாளர் பகுதியில் வதியும் நிரந்தர குடியிருப்பாளரிடம் இருந்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ் மாவட்ட முகாமையாளரால் கோரப்படுகின்றது. பின்வருவோர் விண்ணப்பிக்கத் தகைமை உள்ளவராவார்.

1. யாழ். மாவட்டத்தில் வீட்டையோ அல்லது வீடுகளையோ இல்லாதவராகவும், குருநகர் கிராமசேவையாளர் பிரிவில் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும், 2. விவாகம் செய்தவராக இருத்தல் வேண்டும், 3 குடும்ப மொத்த மாத வருமானம் ரூபா 1200/-க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

பின்வரும் மாதிரிப் படிவத்தில் மாத வருமானம் விசேட சேவை உத்தியோகஸ்தரால் / கிராம சேவை உத்தியோகஸ்தரால் உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பங்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை யாழ் மாவட்ட அலுவலகத்தில் 19 - 5 - 85 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு முன்பாக கையளிக்கப்பட்டு, அதற்கான இலக்கமிடப்பட்ட அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் இவ்வத்தாட்சிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள திகதியில் இக்காரியாலயத்தில் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சைக்கு இப்பத்திரத்தில் குறிப்பிட்ட இலக்க கிரமப்படி சமுகமளிக்க வேண்டும். இம்மாதம் 18 - ம், 19-ம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் பகல் 12 மணி வரையும் மாத்திரம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தபாலில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மாவட்ட முகாமையாளர். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, காட்டுக்கந்தோர் ஒழுங்கை' கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (மா)

### மாதிரி விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரரின் (அ) முழுப்பெயர்: ......................

(ஆ) அடையாள அட்டை இல: ..................
2. வதிவிட விலாசம்; ..........................................
3. விவாகம் செய்தவரா/ செய்யாதவரா; ....................
4. குடும்ப விபரம்:-

| தொடர் இல. | குடும்பத்தில் உள்ளவர்களின் பெயர்கள் | விண்ணப்ப தாரிக்கு உறவு முறை | வயது |
|---|---|---|---|
| | | | |

5. குடும்ப மாத வருமானம் (ரூபா ......................) (ரூபா ............) (எழுத்தில்)
6. விண்ணப்பதாரியின் தொழில்: ..............................
7. குருநகர் கிராம சேவையாளரின் பகுதியில் குடியிருந்தகாலம்;......................................

நானோ / எனது மனைவியோ/ என்னில் சார்ந்துள்ளவர்களோ வீடு அற்றவர்கள் என்பதனையும் தற்பொழுது நாங்கள் .................................................. அவர்களுக்கு சொந்தமானது என்பதனை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி:- ..............................

விண்ணப்பதாரியின் (கையொப்பம்)

மேலே குறிப்பிடப்பட்ட குடும்பமாத வருமானமும் ஏனைய விபரங்களும் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன்.

..........................................

திகதி:- விசேட சேவை உத்தியோகத்தர்/ கிராமசேவை உத்தியோகத்தர்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

3278

## மரண அறிவித்தல்

### திரு. செல்லையா முருகையா

(இளவாலை)

கலட்டியவத்தை இளவாலையைச் சேர்ந்த திரு. செ. முருகையா காலமானர். இவர் இளையதங்கத்தின் அன்புக் கணவரும் சிவராஜரட்ணம் [அதிபர் மகாவித்தியாலயம், வேலணை]. திருஞானரட்ணம் [டி மேக்ஸ், கல்பாண எஸ்டேட்), தேவதாசன் [மின்தறி ஆலை - சங்கானை], பிரேமதாசன் [ஹட்டன் நஷனல் வங்கி, மன்னர்], சத்தியதரன் [லெபனுன்] ஆகியோரின் அருமைத் தந்தையாருமாவார் அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று [15-5-85] புதன்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். தயவுசெய்து உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 3280

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P.O. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126